**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2014/2015**

# நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்/நடனம்/ நாடகமும் அரங்கியலும்/கட்புல, தொழில்நுட்பக் கலைகள்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை

விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்கை நெறிகளை தெரிவுசெய்த பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பதிவு செய்வதற்கான தகைமைகள்

ஓகஸ்ட், 2014 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 3.2 பிரிவைப் பார்க்கவும்) அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

## பரீட்சை மொழி

செய்முறைத் திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும். (2014/2015 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 8.1.8 பிரிவைப் பார்க்கவும்)

## விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா. 300/- செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டும். இக்கொடுப்பனவை ''சிரேஸ்ட உதவி நிதியாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்'' கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயருக்கு வங்கிக் கணக்கிலக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி, மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பப்படத் தேவையில்லை.

பரீட்சார்த்திகள் சுய விலாசம் இடப்பட்ட ரூபா 30/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை (23x10 செ.மீ) யினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்கடித உறை அனுமதி அட்டை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட இருப்பதனால் சரியான அஞ்சல் முகவரி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்திலும் கல்விச்சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரே நபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதியில் மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில், ''சிரேஸ்ட உதவிப் பதிவாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு'' என்ற முகவரிக்கு **12.06.2015 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்**. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செய்முறைத்திறன்காண் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

செய்முறைத் திறன்காண் பரீட்சை தொடர்பான விபரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.esn.ac.lk) பார்வையிடவும், மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்யவும் முடியும். இது தொடர்பில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

பணிப்பாளர்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு

**SWAMI VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES,**
**EASTERN UNIVERSITY, SRILANKA.**
**APPLICATION FOR UNIVERSITY ADMISSIONS- 2014/2015**

## Admission for BFA (Carnatic Music/Dance/Drama & Theatre/Visual &Technological Arts) Degree Programmes

01. Name of the Applicant: (With Initials) ____________________

Name Denoted by Initials: ____________________

National Identity Card Number: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

02. Permanent Address: ____________________

Telephone Number: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

Fax No: (if available) [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

E-Mail Address (if available) ____________________

03. Result of the G.C.E (Advanced Level) Examination:

Index Number: [ ]

Z Score: [ ]

General Aptitude Test Marks: [ ]

| No | **Subjects** | **Grades** | **Medium** |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

04. Name and Address of Parent/Guardian: ____________________

05. Course of Study Applied for University Admission – 2014/2015:

| | |
|---|---|
| Music | |
| Dance | |
| Drama & Theatre | |
| Visual & Technological Arts | |

06. Documents to be attached (**Please tick the appropriate column**)

1. Paying-in Voucher [ ]
2. Certified Copy of G.C.E (A/L) Certificate/s [ ]
3. Certified Copy of G.C.E (O/L) Certificate/s [ ]
4. Certificate in Proof of Eligibility for University Admission Including ZScore/District [ ]
5. Affidavit in support of any change in names appearing in different Documents/Certificates [ ]

I certify that the above particulars furnished by me are true and accurate.

……………………………
Date

…………………………
Signature of Applicant